# ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ

## இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்
## (புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)

# சுருள்பாசி வளர்ப்பு & பாக்கு மட்டை தட்டுகள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் - கருத்தரங்கம்




சிறப்பு விருந்தினர்கள் மேடையில் வீற்றிருந்த காட்சி



கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஒரத்தூர் கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளியில் உன்னத் பாரத் அபியான், எஸ்.ஆர்.எம். தொழில் நுட்பக் கழகம் மற்றும் புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ (இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்) இணைந்து பிப்ரவரி 27, 2021 அன்று மாலை 4.00 மணியளவில் கிராமத்துப் பெண்களை ஊக்குவிக்கும் விதமாகவும் தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையிலும் சுருள்பாசி வளர்ப்பு மற்றும் பாக்கு மட்டை தட்டுகள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. அறக்கட்டளையின் சார்பில், கே.விஜயகோபால், தலைமை திட்டங்கள் அதிகாரி, ச.சுரேஷ்கண்ணன், முதுநிலைத் திட்ட மேலாளர் மற்றும் ஈ.மணிராஜ், விழுதுகள் திட்ட மாணவர்களின் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செட்டிப்புண்ணியம், நாட்டரசன்பட்டு, கொளத்தூர், தென் மேல்பாக்கம், அஞ்சு உள்ளிட்ட எட்டு கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உட்பட 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கபட்ட நிகழ்ச்சியில் முதல் நிகழ்வாக முனைவர் வ. திருமுருகன், இணை இயக்குநர், நோடல் அதிகாரி, உன்னத்பாரத் அபியான் & எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், பொத்தேரி நிகழ்ச்சியில் நோக்கம் குறித்து சிறப்புரையாற்றி துவங்கி வைத்தார். பின்னர் எஸ்.சுரேஷ்கண்ணன், முதுநிலை திட்ட மேலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை அவர்கள் அறக்கட்டளையின் பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் சிறிய உரையாற்றி ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ உறுப்பினரும் மற்றும் பாக்கு மட்டை தட்டு உற்பத்தியாளரும் ஆன எவர் கிரீன் ஏஜென்சீஸ்" (Ever Green Agencies) நிறுவனர் ந. பாவேந்தன் அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

பின்னர் உரையாற்றிய ந.பாவேந்தன், உரிமையாளர், எவர்கீரின் ஏஜென்சிஸ், சென்னை அவர்கள் பாக்குமட்டை தட்டு உற்பத்தி முறைகள், மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்கள் அவற்றைக் கொள்முதல் செய்யும் வழிமுறைகள் அவற்றின் விலை, பாக்குமட்டை தட்டு இயந்திரத்தின் வகைகள், வேலை செய்யும் வழிமுறைகள், தட்டு உற்பத்தி செய்யும் முறைகள், அவற்றை சந்தைப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைதார்.



மேலும் பேசுகையில் 1999 வரை பாக்கு மட்டையைச் சீண்டுவார் யாருமில்லை எனற நிலை மாறி, இன்று விருந்துகளிலும், கேண்டீன்களிலும் பெரும்பாலும் பாக்குமட்டை தட்டுகள்தான் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. சென்னையில் பிரபல நிறுவனங்களான கிருஷ்ணாஸ்வீட்ஸ், முருகன் இட்லிக்கடை, இன்ஃபோசிஸ், இந்தியா சிமெண்ட்ஸ், தமிழ்நாடு கிரிக்கெட் கிளப் போன்ற நிறுவனங்களுக்குத் தனது உற்பத்தியை நேரடி விற்பனை செய்து வருகிறோம். எங்கள் தயாரிப்புகளை வாங்கும் வாடிக்கையாளர்கள் செலவு செய்யும் பணத்திற்கு ஏற்ற தரம், புதுமை, சேவை என அனைத்தையும் நிறைவாகத் தருகிறோம். பாக்குமட்டை தட்டு பயிற்சி வகுப்புகள் மாதம் இரு முறை குறைந்த கட்டணத்தில் நடத்துகிறோம். பயிற்சி தேவைப்படுவோர் எங்கள் கம்பெனிக்கு வந்து பார்வையிட்டு செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர் பேசிய இரத்தினராஜ சிங்கம், சுருள் பாசி வளர்ப்பு பயிற்சியாளர், அவர்களின் சிறப்புரையில் சுருள்பாசி வளர்ப்பு முறைகள், சுருள்பாசியின் பயன்பாடுகள், சுருள்பாசி மதிப்புக்கூட்டுப் பொருள்கள், அதனை சந்தைப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். ஒருங்கிணைந்த பண்ணை அமைத்தல் அதன் மூலம் மீன் வளர்த்தல், ஆடு வளர்த்தல், கோழி வளர்ப்பு மற்றும் அதனை பராமரிக்கும் முறைகள் & அதன் பயன்கள் குறித்தும் விரிவாக விளக்கினார்.



மேலும் பேசுகையில் சுருள்பாசி வளர்ப்பு என்பது வருடம் முழுவதும் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நீர்க்கீரை இதனை வளர்ப்பதற்கு ஒரு ஏக்கர் நிலத்தில் அல்லது 100 சென்ட் அளவில் நாம் 5 சென்ட் அதாவது 2400 சதுர அடி இடத்தை எடுத்துக்கொள்ளலாம். இந்த 2400 அடியில் உற்பத்தி செய்ய முனைவோர் 50 அடி நீளம் 20 அடி அகலம் ஒன்றரை அடி உயரம் கொண்ட ஒரு வளர்ப்பு தொட்டியினை அமைக்க வேண்டும் இதனை சிமெண்ட் கொண்டும் நிரந்தர தொட்டியாக கட்டலாம், அல்லது தார்பாலின் சீற் கொண்டும் இதனை அமைக்கலாம், தார்பாலின் நல்ல தடிமனான சீற் கொண்டு தொட்டியினை அமைப்பதன் மூலம் 8 வருடம் முதல் 10 வருடங்களுக்கு அந்த சீற் நல்ல நிலையில் இருக்கும் என்பன போன்ற பல்வேறு பயனுள்ள தகவல்களை பகிர்ந்துகொண்டார்.




**கே.விஜயகோபால், திட்ட மேலாளர், புதியதலைமுறை அறக்கட்டளை அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி**






**புதிய தலைமுறை அறக்கட்டளை**
24. ஜி.என். செட்டி சாலை, தி.நகர், சென்னை - 600 017,
**மின்னஞ்சல்:** isrbexpo@ptfindia.org | **வலைதளம்:** www.isrbexpo.org
| **மொபைல்: 8754417500, 8754417322, 8754417338, 8754417308**